
# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு



கதை தொகுப்பு

அடியேன்

கார்த்திகா சிவகுமார்

திருவரங்கத்து அமுதனார் சொல்கிறார், எல்லா உயிர்களும் ஒன்று தான். பிரம்மன் - ஆத்மா இந்த இரண்டும் வெவ்வேறு அல்ல. ஒன்றாகிவிடுகிறது.

சிலசமயம் ஒருவிசயத்தை கேள்விப்பட்டிருப்போம். அவன் பகவானோடு ஐக்கியமாகி விட்டான் என்று. ஆனால், ஐக்கியம் என்று நாம் சொல்லக்கூடாது.

ஒரு வாதம் :-

அத்வைதவாதிகள் சுவாமி இராமானுஜருடன் வாதத்திற்கு வந்தனர்.

அப்பில் அப்பைச் சேர்த்தால்? அப்பு என்பது தண்ணீர்.

ஆத்மா - அணு. பரமாத்மா - விபு. எல்லா இடத்திலும் நிறைந்திருப்பவர் பரமாத்மா. ஆத்மா - தாஸன், பரமாத்மா - சுவாமி எம்பெருமான். ஆத்மா - கேசம், பரமாத்மா - கேசி. இது இத்தனையும் ஒன்றாகி விடும் என்றால், தண்ணீரோடு தண்ணீர் கலந்தால் ஒன்றாகி விடுவதைப் போலே, ஜீவாத்மா - பரமாத்மாவோடு கலந்து ஒன்றாகிடுவர்.

இராமானுஜர் கேட்கிறார், தண்ணீர் இப்பொழுது இரண்டு பங்கு இருக்குமா? அல்லது ஒரு பங்கு இருக்குமா? என்கிறார்.

தண்ணீரோடு தண்ணீர் சேர்த்தால் ஒன்றாகும் என்பது சரியே. ஆனால், ஒரு பங்கு நீராக இருக்குமா? இரண்டு பங்கு நீராக இருக்குமா?

தண்ணீர் இரண்டு பங்கு மேலே தானே இருக்கும். அப்படியெனில், ஜீவாத்மாவோடு - பரமாத்மா சேர்ந்தால் பரமாத்மா பெருத்துவிடுவாரா? இல்லை ஜீவாத்மா பெருத்துவிடுமா?.

அப்பொழுது பரமாத்மா - ஜீவாத்மா கலந்தால் ஒன்றாக இருப்பார்களா? பெருத்து போய் விடுவாரா பரமாத்மா? என்ற கேள்வியைக் கேட்டால் பரமாத்மாவிற்கு விகாரம் இருக்கிறது என்பது போல் ஆகும்.

ஆகையாலே, இந்த தண்ணீர் விசயத்தைக் கொண்டு பரமாத்மா - ஜீவாத்மாவிற்கு அர்த்தம் சொல்ல முடியாது.

இதற்கு மறுத்துவிட்டார் சுவாமி இராமானுஜர். சரி வாதத்தை மாற்றி வைப்போம் என்று மாற்றி வைத்தார்கள்.

அப்பில் உப்பைச் சேர்த்தால்?

உப்பினை கை நிறைய எடுத்துக் கொண்டு, தண்ணீரில் கரைத்துவிட்டு பார்த்தால், தண்ணீரில் உப்பு கரைந்துவிடும். இதைப்போல ஜீவாத்மா என்ற உப்பு, பரமாத்மா என்ற ஜலத்தில் போய் கரைந்து ஒன்றாகிவிடுகிறார் என்று சொன்னால் என்ன என்கிறார்கள் அத்வைதவாதிகள்.

இராமானுஜர் சிரித்துக்கொண்டே பதில் சொன்னார். உப்பைத் தண்ணீரில் கரைத்துவிட்ட பின்பு, அந்த தண்ணீர் சுவையான நீராக இருக்குமா? உப்பு நீராக

இருக்குமா? என்று பதில் கேள்வி கேட்கிறார் சுவாமி இராமானுஜர்.

அதைப்போலே பரமாத்மா முதலில் சுவையாக இருந்தார். இந்த உப்பு என்ற ஜீவாத்மா அவருள் கரைந்ததும் உப்புத்தன்மை கொண்டவராக மாறி விட்டார் என்று சொல்லலாமா? சொல்ல முடியாது. ஏனெனில், பரமாத்மாவின் குணம் மாறவே மாறாது. அளவு மாறுகிறது. குணம் மாறுகிறது. இந்த இரண்டு குணங்களும் பரமாத்மாவிடம் இல்லவே இல்லை.

பரமாத்மாவிற்கு குணமும் மாறாது, அளவும் மாறாது.

இப்பொழுது என்ன சொல்ல வேண்டும் என்றால், அப்பு - நீர். நீர் நீராகத் தான் இருக்கும். உப்பு - உப்பாகத் தான் இருக்கும். இந்த இரண்டும் மாறவே மாறாது.

பரமாத்மாவும் - ஜீவாத்மாவும் என்றும் ஒன்றாக முடியாது. இரண்டும் - தனித்தனியே இரண்டாகத்தான் இருக்கும். சுவாமி - சுவாமியாகத்தான் இருப்பார். தாஸன் - தாஸனாகத்தான் இருப்பார். இவ்வுலகத்தில் இருந்தாலும் நான் தான் தாஸன். அந்த வைகுண்ட உலகத்திற்குப் போனாலும் நான் தான் தாஸன்.

பகவானுக்கு குணமுண்டு, விபூதி உண்டு, ஐஸ்வரியம் உண்டு, மோட்சம் கொடுக்கிறார், நாம் அவரிடத்தில் பக்தி பண்ண வேண்டும் என்ற உயர்ந்த அர்த்தங்களை எல்லாம் சுவாமி இராமானுஜர் வெளியிட்டு அத்வைதவாதிகளை ஜெயித்தார்.

எல்லாவற்றிற்கும் பிரம்மம் சரீரமாக உள்ளது. அனைத்திற்கும் பிரம்மம் தான் ஆத்மா. உலகம் அத்தனையும் தனக்கு சரீரமாய் கொண்டதாய் இருக்கும் அதே பிரம்மம் தான், உனக்குள் அந்தராத்மாவாக இருக்கிறது என்பதை தெரிந்து கொள். உலகம் அனைத்திற்கும் எந்தப் பிரம்மம் ஆத்மாவோ, அதே பிரம்மம் தான் உனக்குள் அந்தராத்மாவாக இருக்கிறது என்று ஸ்ரீபாஷ்யத்தில் அருளியுள்ளார் சுவாமி இராமானுஜர்.

சுவாமி இராமானுஜர் நமக்காக ஸ்ரீரங்கத்து அரங்கநாதனிடம் மோட்சத்திற்கு உண்டான வழியைப் பெற்றுக் கொடுத்தார்.

எவரொருவர் எதிராஜர் வாழி! எதிராஜர் வாழி! என்று இராமானுஜரின் திருநாமத்தையும், அவரது திருவடி சம்பந்தத்தையும் பெற்றுக் கொண்டதாக ஒப்புக் கொள்கிறாரோ, அவருடையை தாய், அவரின் தாய், அவர்களது முன்னோர்களின் திருவடியை தேவர்கள் தலை வணங்கி இருப்பார்கள்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

🍁✿❁ பிள்ளை - உறங்காவில்லிதாசர் வைபவம் :-

இராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வந்த காலத்தில் பிள்ளை உறங்காவில்லி தாஸர் என்பவர் வாழ்ந்து வந்தார். ஆவர் இராமானுஜருக்கு எப்படி சிஷ்யனானார் என்பதை

அறியலாம்.

இராமானுஜருக்கு பிராமணர்கள் மட்டும் சிஷ்யர்கள் அல்ல. ஆண்கள் மட்டும் சிஷ்யர்களாக இல்லை. நிறைய ஸ்திரீகளும் சிஷ்யர்களாக இருந்திருக்கிறார்கள். இதெல்லாம் சுவாமி இராமானுஜருக்கே உண்டான தனிச்சிறப்பு.

இராமானுஜர் ஸ்ரீரங்கம் திருவீதிகளில் நடந்தால் 700 சன்னியாசிகள், 12000 ஸ்ரீவைஷ்ணவர்கள், ஆயிரக்கணக்கான பெண்களும் பின் தொடர்ந்து செல்வார்கள். இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒன்றாக இருந்தார்கள் எனில், ஸ்ரீவைகுண்டமே பூலோகத்திற்கு வந்து போல் இருக்கும். 700 சன்னியாசிகள் ஒன்றாக இருந்தார்கள் என்றால் சுவாமி இராமானுஜர் பிரபாவத்தை என்னவென்று சொல்வது! அவருடைய இராமானுஜர் திருவந்தாதியை ஸ்ரீரங்கத்து அரங்கனே கேட்கவேண்டும் என்று ஆசைபட்டது நமக்குத் தெரியும்.

பிள்ளை உறங்காவில்லி தாஸர் எப்படி சுவாமி இராமானுஜரிடத்திலே வந்து சேர்ந்தார் என்பதை அறியலாம்.

பிள்ளை உறங்காவில்லி தாஸர் ஸ்ரீரங்கத்துக்கு பக்கத்திலே உறையூர் என்ற ஊரிலே எழுந்தருளியிருந்தார். அவர் ஒரு மல்லர். அவருக்கோ பொன்னாச்சியார் என்ற பத்தினி இருந்தாள். சுவாமி இராமானுஜர் ஸ்ரீரங்கத்தின் திருவீதிகளில் நடந்து வரும் பொழுது, எதிரே பிள்ளை உறங்காவில்லிதாஸர் வருகிறார். உறங்காவில்லியோ தன்னுடைய மனைவிக்கு குடை பிடித்துக் கொண்டே வருகிறார். இதைப்பார்த்த இராமானுஜருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

இப்பேர்ப்பட்ட ஸ்ரீரங்கத்திலே வாசலில் ஏகப்பட்டோர் பார்க்கும் பொழுது மனைவிக்கு குடை பிடித்துக் கொண்டு செல்கிறாரே என்று பார்த்த இராமானுஜர். அவரை நம் மடத்திற்கு அழைத்து வாரும் என்று தன் சிஷ்யர்களுக்கு ஆணையிட்டார். எதற்காக என்று விசாரிக்கலாம் என்று அழைத்துவரச் சொன்னார்.

உறங்காவில்லியும் சுவாமி இராமானுஜரின் மடத்திற்கு வந்தார். இராமானுஜர், உறங்காவில்லிதாஸரே எதற்காக உம் மனைவிக்கு குடை பிடித்துக் கொண்டு வருகிறீர் நடு வீதியில் அனைவரும் பார்க்கும் அளவிற்கு? என்றார்.

உறங்காவில்லியோ "என் மனைவியின் கண்ணழகு போல் யாருக்கும் கிடையாது. அந்த கண் மேல் சூரிய ஒளி பட்டு சிவந்து விடுமே என்று பயம். அதனால் தான் குடைபிடித்துக் கொண்டு செல் கிறேன்" என்றார்.

சுவாமி இராமானுஜருக்கோ ஆச்சரியம். இப்படி இவர் அழகை ஆராதிக்கிறார் என்று எண்ணினார்.

அடுத்த நிமிடம், கண்ணழகு எல்லாம் கொஞ்ச நாள் மட்டும் தான். இந்த உடல் நிலையானதல்ல. இன்று அழகாகும் இந்த உடம்பு, நாளை அழிந்துவிடும் என்றெல்லாம் உறங்காவில்லி தாஸருக்கு எடுத்துக்கூறிக் கொண்டிருக்கவில்லை சுவாமி இராமானுஜர்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

தன் மனைவியின் கண்ணழகைக் கண்டு வர்ணித்த உறங்காவில்லியைக் கண்டு சுவாமி இராமானுஜர் அடுத்த நிமிடம், கண்ணழகு எல்லாம் கொஞ்ச நாள் மட்டும் தான். இந்த உடல் நிலையானதல்ல. இன்று அழகாகும் இந்த உடம்பு, நாளை அழிந்துவிடும் என்றெல்லாம் உறங்காவில்லி தாஸருக்கு எடுத்துக்கூறிக் கொண்டிருக்கவில்லை சுவாமி இராமானுஜர்.

உறங்காவில்லி தாஸருக்கு என்ன பதில் சொன்னார் சுவாமி இராமானுஜர்!

உன் மனைவியின் கண்ணழகை விட உயர்ந்த கண்ணழகைக் காட்டுகிறேன் பார்க்கிறாயா? என்றார் சுவாமி. என் மனைவியின் கண்களை விட உயர்ந்த அழகு இருக்கிறதா? அப்படியென்றால் பார்க்கிறேன் என்றார் உறங்காவில்லி.

சுவாமி இராமானுஜர் உறங்காவில்லியை நேரே அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம் அரங்கநாதன் முன்பு இருக்கும் தூண்களின் முன்பு நிறுத்தினார்.

ஹே திருவரங்கநாதனே எல்லோருக்கும் காட்டுகின்ற கண்ணினை இவருக்குக் காட்ட வேண்டாம். ஒருநாள் திருப்பாணாழ்வாருக்கு உன் கண்ணழகு அத்தனையையும் காட்டினாயே! தஸ்ய யதா கப்யாசம் புண்டரீக -மேவமக்ஷிணி - கமக்கண்ணா என்றும், தாமரைக் கண்ணா என்றும், புண்டரீகாட்சனாய் மலர்ந்து இருக்கும் உன்னுடைய திருக்கண்ணினை இவருக்குக் காட்டுவாயாக! என்று அரங்கநாதனிடம் பிரார்த்திதார் சுவாமி இராமானுஜர்.

பெரிய பெருமாளும் தன் திருக்கண் மலர்ந்து தாஸரை அனுக்கிரகிக்க, கமலக்கண்ணன் - தாமரைக்கண்ணன் - தன் திருக்கண்களால் தாஸரைப் பார்க்க அன்றிலிருந்து ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமையானார் உறங்காவில்லி தாஸர்.

இந்த உறங்காவில்லி தாஸர் ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாளுக்கு திருவாதாரதனம் நடைபெறும் பொழுது முன்னே சென்று திருவாதாரனம் நல்ல முறையில் நடைபெறுகிறதா? என்பதைக் கண்காணிக்கும் கைங்கரியம். இவர் இடுப்பில் கத்தி வைத்திருப்பார். பெருமாளுக்கு திருவாதாரனத்தில் தவறு நிகைழ்ந்தால் கத்தியால் தன்னையே குத்திக் கொள்வாராம். அப்பேற்பட்ட கைங்கரியம் மேற்கொண்டார் உறங்காவில்லிதாஸர்.

இவருடைய வம்சாவளியினர் தாஸர் பரம்பரையில் இருந்து வந்தவர்கள். இன்றும் திருக்கோவிலில் கைங்கரியம் மேற்கொண்டு வருகிறார்கள். அவர் தாஸர்தான். பிராமணன் அல்லாதவர். இருந்தாலும் சுவாமி இராமானுஜர் உறங்காவில்லி தாஸருக்கு எவ்வளவு மதிப்பு கொடுத்திருக்கிறார் தெரியுமா?

சுவாமி இராமானுஜர் நித்யப்படி காவேரி நீராடச் செல்லுவார். அப்பொழுது முதலியாண்டான் கைப்பற்றிக் கொண்டு செல்லுவார். தீர்த்தமாடி விட்டுச் செல்லும் பொழுது உறங்காவில்லிதாஸரின் கைகளைப் பற்றிக் கொண்டு தான் வருவார் சுவாமி இராமானுஜர்.

அந்த நாளில் இதையெல்லாம் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இராமானுஜரிடம் இதைக் கேட்டே விட்டார்கள். அதற்கு சுவாமி பதில் சொல்கிறார், முதலியாண்டான் பிராமணனாகப் பிறந்தவர். பிறக்கும் பொழுது உயர்ந்த குடியில் பிறந்தவர். இப்படி

எண்ணுவார்கள். இந்த எண்ணம் கூடாது. தவறு என்ற ஞானத்தினால் தான், அந்த எண்ணமே வராத இவர் எனக்கு மிகவும் வேண்டியவர் என்று சுவாமி சொல்கிறார்.

ஆக, நாம் அத்துணை பேரும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். உயர்ந்த ஜாதியில் பிறந்துவிட்டோம் என்ற எண்ணம் கூடாது.

உறங்காவில்லி தாஸர் ஒருமுறை காலட்சேபம் பண்ணிக்கொண்டிருக்கும் பொழுது இராமானுஜர் அழுது கொண்டே கேட்பாராம். உன்னைப் போல் பகவத்கீதையை அனுபவித்து உபந்நியாசம் செய்வதைப் பார்க்கும் பொழுது பெருமையாக உள்ளது என்றார்.

இராமானுஜர் காலட்சேபம் பண்ணும் பொழுது இராமாயணத்தின் விபீஷண சரணாகதி பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். விபீஷணர் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைத் தரிசித்து சரணாகதியடைய வரும் பொழுது, பல வானரங்கள் அவரை வந்த வழியே வழியனுப்பச் சொல்ல, இராமனின் முகம் வாடிப் போகிறது. இந்தக் கதையை இராமானுஜர் விவரித்துக் கொண்டிருக்கிறார்.

உறங்காவில்லி தாஸர் ஓ! என்று அழுதுகொண்டு காலட்சேபத்தில் இருந்து எழுந்து போக ஆரம்பித்து விட்டார். இராமானுஜர் காலட்சேபம் பண்ணும் பொழுது யாரேனும் எழுந்து செல்வார்களா? அதுவும் தாஸர் எழுந்து செல்வாரா?

பிள்ளை உறங்காவில்லி தாஸரே நில்லும்! எதற்காக எழுந்து போகிறீர்? என்று சுவாமி கேட்டார். உறங்காவில்லி தாஸரோ விபீஷணரோ இறைவன் மேல் பக்தி ஒன்றை மட்டுமே கொண்டு, சரணாகதியடைய வருகிறார். அவருக்கே இவ்வளவு கஷ்டம் என்றால், நமக்கெல்லாம் ஏது முக்தி? அடியேன் இதற்கெல்லாம் அருகதை இல்லாதவர்! என்று சொல்லி அழுது கொண்டே ஓடினார்.

இராமானுஜர் அவரைத் தடுத்து நிறுத்தினார். நான் மோட்சத்திற்கு போவேனா? என்று கேட்டார் இராமானுஜர். தேவரீர் என்ன வார்த்தை சொல்கிறீர்கள். அவசியம் நீர் மோட்சத்திற்கு போவீர். இதில் என்ன சந்தேகம்? என்று இராமானுஜர் கேட்டார். அப்பொழுது இராமானுஜர் சொல்கிறார், நான் மோட்சத்திற்கு போகும் பொழுது உம்மை விட்டுச் செல்ல மாட்டேன். கவலைப்படாதீர் என்றார் சுவாமி.

இந்தக்கேள்வியை முதல் தடவையா நீ கேட்டு நான் பதில் சொல்லவில்லை. இதே கேள்வியை நம்பிக்கையோடு நான் பெரிய நம்பிகளிடம் கேட்டேன். பெரிய நம்பிகள் காலட்சேபம் பண்ணும் பொழுது இதே கேள்வியை நான் கேட்டேன்.

பெரிய நம்பிகள், நான் மோட்சத்திற்கு போவேன் என்று நம்புகிறாயா? என்றார். இராமானுஜர் - நான் நம்புகிறேன் என்றார்.

அதனால் பெரியநம்பிகள் மோட்சத்திற்கு செல்லும் பொழுது நான் செல்வேன். நான் செல்லும் பொழுது நீர் வருவீர் என்றார்.

குருபரம்பரையில் நம் ஆச்சாரியாரை நாம் பற்றிக் கொண்டால் அவர் நம்மை மோட்சத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

ஆகையாலே, நமக்கு சங்கிலித்தொடர் போலே குருபரம்பரா மூலம் மோட்சம் கிட்டும்

என்று பிள்ளை உறங்காவில்லி தாஸருக்கு எடுத்துரைத்தார். இது உறங்காவில்லி தாஸரின் சரித்திரம்.

**தொடரும். . .**